**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

**SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD**

**ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

EDB SRI LANKA

# விலைமனுதாரர்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கையில் கடல்சார் மற்றும் Offshore சேவைகள் (M&OS) துறையை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக தொழில்முறை பொது உறவுகள் சேவைகள் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகை - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)

## ஒப்பந்த இல. EDB/PU/NCB/2026/02

1. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது (SLEDB) ஏற்றுமதிகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புக்கு பொறுப்பான உயர் அரச நிறுவனமாகும். கடல்சார் மற்றும் Offshore சேவைகள் (M&OS) துறை அந்நிய செலாவணி வருவாயை ஈட்டுவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்யும் திறன் கொண்ட அதிக சாத்தியமுடைய ஏற்றுமதித் துறை ஒன்றாக SLEDB அவதானம் செலுத்தியுள்ளது.

2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) - கடல்சார் மற்றும் Offshore சேவைகள் துறையை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக தொழில்முறை பொது உறவுகள் சேவைகள் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகைக்காக தகுதிபெற்ற மற்றும் தொழில்முறை சேவை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து (விலைமனுதாரர்கள்) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) சார்பில், திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

3. 2024 தேசிய பெறுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB – ஒற்றை கட்ட இரட்டை கடிதவுறை விலைமனு நடைமுறை) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும், விலைமனு சமர்ப்பிக்கும் நேரத்தில் எந்த ஒரு அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை நிர்வாகத்தினாலும் இடைநிறுத்தப்பட்டு அல்லது தடை செய்யப்படாதவராக இருத்தல் கூடாது. தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோலில் பின்வருவனவும் அடங்கும். (தேவையான மேலதிக தகைமை பெறுகை ஆவணங்களில் தரப்பட்டுள்ளது).

**தகைமை அளவுகோல்**

**a) பொதுவான அனுபவங்கள்.**

- இலங்கையின் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைய சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- பொது உறவுகள், தொடர்பாடல்கள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறைகளில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**b) இதனையொத்த பண்பின் ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுபவம்.**

- கடந்த ஐந்து (05) ஆண்டுகளுக்குள் குறைந்தது இரு சர்வதேச PR மற்றும்/ அல்லது இதனையொத்த பண்பு ஒன்றில் சர்வதேச சந்தைப்படுத்தல் பிரசாரங்களில் வெற்றிகரமாக வடிவமைத்தல் மற்றும் செயற்படுத்தலில் நிரூபிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும், ஏற்றுமதி ஊக்குவிப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு அல்லது ஒப்பிடத்தக்க துறைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

**c) நிதித் திறன்**

- சேவை வழங்குநர் (அல்லது கூ.மு./ கூட்டாண்மையாக இருந்தால் முன்னிலை கூட்டாண்மையாளர்) கடந்த மூன்று (03) ஆண்டுகளுக்கு குறைந்தது 10 மில்லியன் இ.ரூபாவின் ஆண்டு சராசரி புரள்வை பெற்றிருத்தல் வேண்டும்.
- சேவை வழங்குநர், திரவ சொத்துக்கள், கடன் வசதிகள் அல்லது ஏனைய நிதி ஆதாரங்கள் போன்ற நிதி வளங்கலுக்கு அணுகல் இருப்பதை நிரூபித்தல் வேண்டும். இவை, இந்த திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய கடமைகளை கழித்த பின், குறைந்தபட்சமாக இ.ரூபா 02 மில்லியன் பணப் பாய்வு தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இருத்தல் வேண்டும்.

5. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் தொலைபேசி: 011-2300702, மின்னஞ்சல்: disna@edb.gov.lk கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB – EDB கோபுரம், கட்டம் 06, பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக இ.ரூபா 1,000.00 செலுத்தி பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் (SLEDB) இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான பெறுகை ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். பெறுகை ஆவணங்களை www.srilankabusiness.com/announcements என்ற SLEDB இணையதளத்தில் “Announcements” பிரிவின் கீழ் பார்வையிடும் நோக்கத்திற்காக தரவிறக்கம் செய்யலாம். பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட முறைக்கு அமைய கொடுப்பனவை மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு குறித்த கொடுப்பனவு ரசீது அல்லது பற்றுச்சீட்டை முன்மொழிவுக்கு இணைத்தல் வேண்டும். குறித்த செயற்பாடு அல்லது செயற்பாடுகளுக்கான தேவையான கொடுப்பனவு ஆதாரம் இல்லா முன்மொழிவுகள் மதிப்பீட்டுக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

7. அசல் விலைமனு உறையில் மூடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் “இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) - இலங்கை கடல்சார் மற்றும் Offshore சேவைகள் துறையை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக தொழில்முறை பொது உறவுகள் சேவைகள் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல் மற்றும் ஈடுபடுத்தலின் பெறுகைக்கான விலைமனு - EDB/PU/NCB/2026/02” என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுவை சமர்ப்பிக்கும் பெயர் மற்றும் நிறுவனம் உறையில் இடம்பெறுதல் வேண்டும் (விலைமனு தரவுத் தாள் 8.2 ஐ பார்க்கவும்).

8. விலைமனுக்களை 2026 ஒக்டோபர் 16 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் (மேலுள்ள பந்தி 5) முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2026 ஒக்டோபர் 16 ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபா ஐம்பதாயிரத்துக்கு (இ.ரூபா 50,000.00) இற்கு குறையாத விலைமனு உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

9. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு EDB, 9ஆவது மாடி VIP அறையில் 2026 ஒக்டோபர் 07 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு இடம்பெறும். அனைத்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**இணையதளம்: http://www.srilankabusiness.com**
**செப்டெம்பர் 30, 2026**